**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**எஸ்.டி.சி.எண்: 1078/2022**

**ம.சா : 1(சரவணன்)**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 14.02.2025.**

**புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.**

**<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் Diplomo படித்துள்ளேன். தமிழ் ஆங்கிலம் 2ம் எழுத படிக்க தெரியும். நான் பல் பொருள் அங்காடி வைத்துள்ளேன். அதன் பெயர் சரவணா ஸ்டோர் ஆகும். மேலும் விவசாயம் செய்து வருகிறேன். பணம் வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்கிறேனா என்றால் நண்பர்கள் கேட்டால் பணம் கொடுப்பேன். தற்போது வரை வட்டிக்கு நான் யாருககும் பணம் கடன் கொடுக்கவில்லை. கைமாத்து கடனாக தான் பணம் கொடுத்துள்ளேன். எதிரி எனக்கு நண்பர் என்றால் சரிதான். எதிரியை இன்றைய தேதியில் இருந்து 5 வருடங்களாக தெரியும். நான் நடத்திவரும் சரவணா ஸ்டோர் தனிநபர் நிறுவனம் ஆகும். அதற்க்கு நான் தான் உரிமையாளர் ஆவேன்.

2. அதற்க்கு நான் வருமான வரி கணக்கு செலுத்தி வருகிறேன். எனது கடைக்கு தனியாக வங்கி கணக்கு உள்ளது. எனக்கும் தனியாக வங்கி கணக்கு உள்ளது. மேற்படி நிறுவனத்தை 2009 ஆண்டு முதல் நடத்தி வருகிறேன். மேற்படி நிறுவனம் என்பது தனியான சட்ட நபர் என்பது எனக்கு தெரியும். ம.சா.ஆ.1 ஆவணம் எந்த கணக்கிற்க்கு உட்பட்டது என்றால் சம்பத் பவுல்டரி பார்ம் உடையதாகும். சம்பத் பவுல்டரி பார்ம் எதிரி நடத்தி வரும் நிறுவனம் என்றால் சரிதான். அந்த நிறுவனமும் தனியான ஒரு சட்ட நபர் என்றால் சரிதான். நான் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு மற்றும் இந்த புகார் தாக்கல் செய்ய கூறியுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு கூறப்பட்டதாகும்.

3.மேற்படி அறிவிப்பிலும், புகாரிலும் சம்பத் புவுல்டரி பார்ம் காசோலை என்று குறிப்பிட்டு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த நிறுவனத்திற்க்கு முன்அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், அந்த நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும் சொன்னால் அந்த நிறுவனத்தின் உரிமையாளர்

எதிரி என்பதால் நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவில்லை. நிறுவனத்தை தரப்பினராக சேர்க்காத காரணத்தால் இந்த வழக்கு தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிக்கு நான் முன் அறிவிப்பு அனுப்புவதற்க்கு முன்பு 29.09.2022 ஆம் தேதி எதிரி எனக்கு ம.சா.ஆ.6 அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு எனக்கு காலதாமதமாக கிடைத்தது.

4. ம.சா.ஆ.6 அறிவிப்பை தவிர இந்த வழக்கை பொருத்து வேற எந்த அறிவிப்பும் எனக்கு வரவில்லை. அந்த அறிவிப்பை 03.10.2022 ஆம் தேதி நான் பெற்றுக்கொண்டேன் என்றும், அந்த அறிவிப்பிற்க்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை என்னிடம் காட்டப்படுவது என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.6 அறிவிப்பை எந்த தேதியில் பெற்றேன் என்று எனக்கு தற்போது நினைவில் இல்லை. ம.சா.ஆ.6 அறிவிப்பில் எதிரி என்னிடம் ரூபாய் 20 லட்சம் பெற்றார் என்றும் அந்த தொகையை 20.03.2021 –ல் பெற்றார் என்றும், அறிவிப்பு அனுப்பிய தேதியில் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை தெரிவித்தும், அந்த காலக்கட்டத்தில் பண நெருக்கடி ஏற்பட்டிருந்ததை குறிப்பிட்டும் 6 மாத கால அவகாசம் கேட்டும் அறிவிப்பு அனுப்பினார் என்று சொன்னால் எதிரியை தொடர்ப்பு கொள்ளவே முடியவில்லை.

5. மேற்படி ம.சா.ஆ.6 அறிவிப்பை பெற்றவுடன் நான் வழக்கறிஞர் மூலமாக 13.10.2022 ஆம் தேதி ம.சா.ஆ.7 பதில் சட்ட அறிவிப்பை அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.7 சட்ட அறிவிப்பிற்க்கு முன்பாக ம.சா.ஆ.6 சட்ட அறிவிப்பை நான் பெற்றேன் என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி அறிவிப்பில் தெரிவித்த பிறகு இவ்வழக்கு காசோலையை 20.10.2022 ஆம் தேதி வங்கி கணக்கில் வசூலுக்கு செலுத்தினேன் என்றால் சரிதான். காசோலையில் அந்த தேதி குறிப்பிடப்பட்டிருந்ததால் வசூலுக்கு போட்டேன். நான் காசோலையை வங்கி கணக்கில் செலுத்தும்போது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

6.எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று தெரிந்தும் எதிரி கொடுத்த காசோலையை வசூலுக்கு செலுத்தி உள்ளதால் எதிரியானவர் பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் எவ்வித குற்றமும் புரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புதல் அட்டை என்னால்

03.10.2022 ஆம் தேதி பெறப்பட்டதாகும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதாகும். **அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு தொகையை தவிர வேறு எந்த பண பரிமாற்றமோ அல்லது எந்த தொகையோ எதிரிக்கு கொடுக்கவோ, திரும்பி வாங்கவோ செய்தேனா என்றால் அவ்வாறு பணம் கொடுக்கவோ, வாங்கவோ செய்யவில்லை.

7. நான் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வது வழக்கம் என்றால் சில நேரங்களில் ஆங்கிலத்திலும், தமிழிலும் கையெழுத்து செய்வேன். சில சமயங்களில் நான் ஆவணங்களில் சுருகொப்பம் கையெழுத்து செய்வேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

Distirct Munsif cum
Judicial Magaistrate

SHANMUGANATHAN Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.